அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 16/89

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு -07.
1989, மார்ச்சு 22 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

## அரசாங்க உத்தியோகத்தர்களின் வதிவிடத் தேவைகள்

அரசாங்க சேவையிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் பின்வரும் விபரங்களைப் பெறுவதற்கு அரசாங்க நிருவாக இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

(1) இந்நாட்டின் எப்பகுதியிலும் தங்களுக்குச் சொந்தமான வீடு கட்டக்கூடியவொரு காணியை அல்லது வீட்டைவைத்திராத (வாழ்க்கைத் துணையையும் சார்ந்திருக்கும் பிள்ளைகளையும் உள்ளடக்கி) உத்தியோகத்தர்களின் பெயர்கள்.

(11) நாட்டின் எப்பகுதியிலும் வீடு கட்டக் கூடியவொரு காணியை வைத்திருக்கும் ஆனால் வீட்டை வைத்திராத (வாழ்க்கைத் துணையையும் சார்ந்திருக்கும் பிள்ளைகளையும் உள்ளடக்கி) உத்தியோகத்தர்களின் பெயர்கள்,

02. இத்தகைய உத்தியோகத்தர்களின் இயைபுடைய விபரங்கள் இணைப்பு 'அ' விலுள்ள ஒரு சத்தியக் கடதாசி வடிவத்தில் 1989, ஏப்ரல் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அமைச்சின் செயலாளருக்கு/திணைக்களத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

03. அரசாங்க சேவையிலுள்ள (சிறு, உபநிலை, பதவிநிலை) தரங்களின் படி 1ஆம் பந்தியின் (1)ஐயும் (11)ஐயும், பிரகாரம் தயாரிக்கப்பட்ட அட்டவணைகளை 1989 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் அனுப்புமாறு அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவர் வேண்டப்படுகின்றார்.

ஒப்பம்: ( எம்.என். ஜுனைட் )
அரசாங்க நிருவாகத்திற்கான இராஜாங்கச் செயலாளரும் அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளரும்.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 40/89

அரசாங்க நிருவாக, மாகாணசபை,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு
1989, ஆகஸ்ட் 14 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில்
சேவையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு
ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்குதல்.

---

மேலே குறிப்பிட்ட விடயம் பற்றிய 86.12.11ஆந் திகதி
357 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைத் தொடர்பிலாம்.

..2

09. ............................பட்டினத்தை/பிரதேசத்தை
எனது நிரந்தர வதிவிடமாகக் கொள்வதற்கு நான் விரும்புகிறேன்.

10. (1) நான் சொந்தமாக ஒரு வீடு வைத்திருக்கிறேன்/வைத்திருக்கவில்லை

(11) எனது வாழ்க்கைத் துணை சொந்தமாக ஒரு வீட்டை வைத்திருக்கிறார்/ வைத்திருக்கவில்லை.

(111) என்னைச் சார்ந்திருக்கும் பிள்ளைகள் சொந்தமாக ஒரு வீட்டை வைத்திருக்கிறார்கள்/வைத்திருக்கவில்லை.

11. (1) வீடு கட்டுவதற்குப் பொருத்தமானவொரு காணி நான் சொந்தமாக வைத்திருக்கிறேன்/வைத்திருக்கவில்லை.

(11) எனது வாழ்க்கைத் துணை வீடு ஒன்றைக் கட்டுவதற்குப் பொருத்தமான காணியொன்றைச் சொந்தமாக வைத்திருக்கிறார்/வைத்திருக்கவில்லை.

(111) என்னைச் சார்ந்திருக்கும் பிள்ளைகள் வீடு கட்டுவதற்குப் பொருத்தமான காணியொன்றைச் சொந்தமாக வைத்திருக்கிறார்கள்/வைத்திருக்கவில்லை.

12. மேற்போந்த சத்தியக் கட்டாசியை மேலே குறிப்பிட்ட சான்றாளருக்கு வாசித்து விளக்கப் படுத்தியுள்ளேன். இதிலுள்ள பொருளடக்கத்தை விளங்கிக் கொண்டவராகத் தோற்றிய சொல்லப்பட்ட சான்றாளர் அவ்வண்ணம் தாம் விளங்கிக் கொண்டதாகச் சத்தியம் செய்து/உறுதிப்படுத்தி ..................ல் 198.....ஆம் ஆண்டு...........மாதம்......ஆந் தேதி யாகிய இன்று எனது முன்னிலையில் தமது ஒப்பத்தை இட்டுள்ளார்.

2/-ரூபா முத்திரை

சான்றாளரின் ஒப்பம்

........................................
சமாதான நீதவான் (உத்தியோகபூர்வ முத்திரை)

ப.கு. பொருத்தமற்ற சொற்கள் கீறப்பட்டு இரு தரப்பினர்களினாலும் முதலெழுத்தொப்பமிடப்படல் வேண்டும்.

11. அத்தகைய பதில்களை உடனடியாக அனுப்ப முடியாத சந்தர்ப்பங்களில் தற்போதைக்கான பதில் ஒன்றை அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும். அதன் பின் தேவைப்படக் கூடிய தரவுகளுடன் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அத்தகவல்கள் கிடைத்தவுடன் உடனடியாக பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

111. அக்கடிதம் எவருடைய பெயர் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படுகிறதோ அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அதற்கான பதில் அவருடைய கையொப்பத்தைப் பெற்று அல்லது மேற்கையொப்ப ஏற்பாட்டை உபயோகித்து அனுப்பப்படல் வேண்டும். (கடிதமொன்று மான்புமிகு அமைச்சரொருவருக்கு அல்லது/மாண்புமிகு இராஜாங்க அமைச்சரொருவருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டிருந்தால் அந்த விடயம் அவருடைய கவனிப்பிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அவர் அதற்கான பதிலை நேரடியாக அனுப்புவார். கடிதமொன்று செயலாளரொருவரினால் அல்லது திணைக்களத் தலைவரொருவரினால் அல்லது கூட்டுத்தாபனமொன்றின் தலைவரினால் அல்லது பிற உத்தியோகத்தரினால் பெறப்படும்போது அக்கடிதத்திற்கான பதில் அவரினால் அல்லது மேற்கையொப்ப ஏற்பாட்டை உபயோகித்து அனுப்பப்படல் வேண்டும்.)

1V. பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து/மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் கடிதங்களின் பெறுகையைப் பதிவு செய்வதற்கு தனிப்பட்டவொரு இடாப்பு பேணப்பட வேண்டும். அத்தகைய கடிதமொன்று பெறப்படும் போது அவ்விடயமானது அக்கடிதம் கிடைத்த தேதி, தற்போதைக்கான பதில் அனுப்பப்பட்ட தேதி, இறுதிப் பதில் அனுப்பப்பட்ட தேதி, தொடர்புடைய கோப்பிலக்கம் முதலியனவற்றின் விவரங்களுடன் பதியப்படல் வேண்டும்.

02. இச்சுற்றறிக்கையின் பொருளடக்கத்தை கடைப்பிடிப்பதன் பொருட்டு தங்களுடைய அலுவலகத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களினதும் கவனத்திற்குக் கொண்டு வருக.

( சிறில் கமகே. )
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.